# சட்டப்பேரவையில் 110-விதியின் கீழ் முதல்வர் ஆற்றிய உரை!.. முதல் பக்கத் தொடர்ச்சி

**மூன்றாவது அறிவிப்பு;** அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், அவர்களுடைய குடும்பத்தினருடன் பண்டிகைகளைச் சிறப்பாகக் கொண்டாடிடும் வகையில், ஏற்கெனவே இதுவரை வழங்கப்பட்டு வரும் பத்தாயிரம் ரூபாய் பண்டிகை கால முன்பணம் தற்போது இருபதாயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 8 இலட்சம் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெறுவார்கள்.

**நான்காவது அறிவிப்பு;** அரசுப் பணியாளர்களுடைய குழந்தைகள் உயர்கல்வி பயில்வதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இந்த அடிப்படையில், அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் கல்வி முன்பணம் இந்த ஆண்டிலிருந்து தொழிற்கல்வி பயில ஒரு இலட்சம் ரூபாயாகவும், கலை மற்றும் அறிவியல் மற்றும் பாலிடெக்னிக் பயில ஐம்பதாயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கல்வி முன்பணம் உயர்வால் தங்களின் குழந்தைகள் உயர்கல்வி பயில விரும்பும் அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெறு வார்கள்.

**திருமண முன்பணம் உயர்வு!**

**ஐந்தாவது அறிவிப்பு;** அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், தமது பணிக்காலத்தில் தேவையின் அடிப்படையில் திருமண முன்பணமாக இதுவரை பெண் ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் மற்றும் ஆண்களுக்கு ஆறாயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இதனை பலமடங்கு உயர்த்தி அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் பொதுவாக ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**ஆறாவது அறிவிப்பு;** தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகைக்கு முன்னாள் கிராம பணியமைப்பு உட்பட C மற்றும் D பிரிவு ஓய்வூதியதாரர்கள், அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் மற்றும் அனைத்துக் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் வழங்கப்படும் பரிசுத் தொகை ஐந்நூறு ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாயாக இனி உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உயர்வால் சுமார் நான்கு இலட்சத்து எழுபத்து ஓராயிரம் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன் பெறுவார்கள். இதனால் அரசிற்கு ஏற்படும் கூடுதல் செலவினம் சுமார் 24 கோடி ரூபாயாக இருக்கும்.

> **முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது வழியில் அரசு ஊழியர்களுக்கு அரணாக, அரசு ஊழியர்களின் நலனில் அக்கறை கொண்ட அரசாக திராவிட மாடல் அரசு என்றென்றும் தொடரும் – தொடரும் – தொடரும் என்று கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)**

**ஏழாவது அறிவிப்பு;** ஓய்வூதியதாரர்கள் அவர்தம் குடும்பத்தினருடன் பண்டிகையைச் சிறப்பாக கொண்டாடிட, தற்போது வழங்கப்படும் பண்டிகை கால முன்பணம், நான்காயிரம் ரூபாயிலிருந்து ஆறாயிரமாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உயர்வால், சுமார் 52 ஆயிரம் ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவர். இதனால் பத்து கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

**பழைய ஓய்வூதியத் திட்டம் செப்.30-க்குள் அறிக்கை!**

**எட்டாவது அறிவிப்பு;** அண்மையில், பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் ஆகிய மூன்று ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்திட ஒரு குழு அமைத்து, அந்தக் குழு தனது அறிக்கை மற்றும் பரிந்துரையை ஒன்பது மாதங்களுக்குள் சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டுள்ளது. பல்வேறு அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கையின் அடிப்படையில், இந்தக் குழு தனது அறிக்கை மற்றும் பரிந்துரையை செப்டம்பர் மாதம் 30ம் தேதிக்குள் சமர்ப்பித்திட அறிவுறுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மகப்பேறு கால விடுப்பு உயர்வு!**

**ஒன்பதாவது அறிவிப்பு;** திருமணமான அரசு பெண் பணியாளர்களுக்கு மகப்பேறுக்காக ஒன்பது மாத காலமாக இருந்த விடுப்பை 01.07.2021 முதல் ஓராண்டு காலமாக உயர்த்தப்பட்டு, ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், தற்போது உள்ள விதிகளின்படி மகப்பேறு விடுப்பு காலம் தகுதிகாண் பருவத்திற்கு (Probation period) கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இதன் காரணமாக அரசு பணிகளில் பணியாற்றி வரும் பல்லாயிரக்கணக்கான இளம் மகளிர் மகப்பேறு விடுப்பு எடுத்தால், தகுதிகாண் பருவம் உரிய காலத்திற்குள் முடிக்க இயலாமல் அவர்களுடைய பதவி உயர்வு பாதிக்கப்படுவதுடன், பணிமூப்பினை இழக்கும் நிலையும் ஏற்படுகிறது. மகளிர் முன்னேற்றத்திற்காக அனைத்து முயற்சிகளையும் எடுத்து வரும் இந்த அரசு, அரசுப் பணிகளில் பணியாற்றிவரும் மகளிரின் பணி உரிமைகளை பாதுகாக்கும் வகையில், இனிவரும் காலங்களில் அரசு பெண் ஊழியர்களின் மகப்பேறு விடுப்புக் காலத்தினை அவர்களது தகுதிகாண் பருவத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது வழியில் அரசு ஊழியர்களுக்கு அரணாக, அரசு ஊழியர்களின் நலனில் அக்கறை கொண்ட அரசாக திராவிட மாடல் அரசு என்றென்றும் தொடரும் – தொடரும் – தொடரும் என்று கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பினை வெளியிட்டார்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, புதுச்சேரி முத்தியால்பேட்டை தொகுதி மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா. சரவணன் ஏற்பாட்டில், புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

### முதல்வர் பிறந்த நாள் விழா! முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா. சரவணன் ஏற்பாட்டில்

# 250 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு நல உதவிகள்!

## புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா வழங்கினார்!

புதுச்சேரி, ஏப். 29-

தமிழ்நாடு திராவிட மாடல் அரசின் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, புதுச்சேரி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா. சரவணன் ஏற்பாட்டில் முத்தியால்பேட்டை தொகுதியைச் சேர்ந்த 250 மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 5 ஆயிரம் பெண்களுக்கு நலத்திட்ட உதவிகளை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா வழங்கினார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், தமிழ்நாடு திராவிட மாடல் அரசின் முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் 72-வது பிறந்த நாள் விழாவை, புதுச்சேரி மாநில தி.மு.க.-வினர் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், மருத்துவ முகாம்கள் நடத்தியும் கொண்டாடி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக முத்தியால்பேட்டை தொகுதியைச் சேர்ந்த 250 மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 5 ஆயிரம் பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா முத்தியால்பேட்டை தெபெசன்பேட் வீதியில் உள்ள தொகுதி திமுக அலுவலகத்தில் நடைபெற்றது.

புதுச்சேரி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா. சரவணன் ஏற்பாட்டில் நடைபெற்ற விழாவில், புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா கலந்து கொண்டு, மகளிர் சுயஉதவிக் குழுவைச் சேர்ந்த பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

இந்த விழாவில், மாநில கழக அவைத்தலைவர் எஸ். பி. சிவக்குமார், கழக சட்டமன்ற உறுப்பினர்கள் வி. அனிபால் கென்னடி, இரா. செந்தில்குமார், எல். சம்பத், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் எஸ்.கோபால், மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர் டாக்டர் ரோ. நித்திஷ் மற்றும் முத்தியால்பேட்டை தொகுதி கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

விழா நிறைவில் முத்தியால்பேட்டை தொகுதி செயலாளர் ஜி.பி. சவுரிராஜன் நன்றி கூறினார்.

# நெல்லை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் கூட்டம்!

## மேயர் கோ.ராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது!

*நெல்லை, ஏப். 29 -*

நெல்லை மாநகராட்சி மைய அலுவலகம் இராஜாஜி மண்டபத்தில் மாமன்ற கூட்டம் மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் தலைமையில் மாநகராட்சி ஆணையாளர் மருத்துவர் என்.ஓ.சுகபுத்ரா, துணை மேயர் கே.ஆர்.ராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மேயர் கோ.ராமகிருஷ்ணன் தெரிவித்ததாவது.

நகர்ப்புற பகுதிகளில் உள்ள புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டி 10 ஆண்டுகளுக்கு மேல் குடியிருப்பவர்களுக்கு அவ்விடத்தினை அவர்களுக்கே பட்டா வழங்கும்படி உத்தரவு பிறப்பித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மாமன்றத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நெல்லை மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலம் அலுவலகம் மற்றும் புதிதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாக கட்டிடம் பகுதியில் இருந்து வந்த திருமண மண்டபத்திற்கு இதற்கு முன்பு முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பெயரில் கலைஞர் திருமணம் மண்டபம் என இருந்து வந்தது.தற்போது மேற்படி கட்டிடம் இடிக்கப்பட்டு சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் புதிதாக வணிக வளாகம் கட்டிடம் கட்டப்பட்டு தச்சநல்லூர் மண்டலம் வணிக வளாகம் என உள்ளது. புதிதாக கட்டப்பட்டுள்ள தச்சநல்லூர் மண்டலம் வணிக வளாகத்தில் கட்டிடத்திற்கு மீண்டும் கலைஞர் கருணாநிதி மாளிகை என பெயர் சூட்டி சிறப்பு தீர்மானம் நிறைவேற்றிட வேண்டி தச்சநல்லூர் மண்டல தலைவர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார். அவர்களின் கோரிக்கையை ஏற்று மேற்படி கட்டிடத்திற்கு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி மாளிகை என பெயர் சூட்டி சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப் படுகின்றது.

நெல்லை மாநகராட்சி 55 வார்டுகளின் மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையின்படி 4 மண்டலங்களிலும் அடிப்படை அத்தியாவசியமான பணிகள் அவசர அவசியமாக செய்ய வேண்டியுள்ளது. எனவே ஒவ்வொரு வார்டுகளுக்கும் குறைந்தபட்சம் தலா ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் பொது நிதியிலிருந்து மாமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கும் பணிகளை செய்ய இம்மாமன்றம் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்படுகின்றது.

முதலமைச்சர் அவர்களின் கொள்கை முடிவில் அறிவிக்கப்பட்ட திட்டத்தின் கீழ் நெல்லை மாநகராட்சிக்கு உட்பட்ட பாளையங்கோட்டை மற்றும் மேலப்பாளையம் மண்டலங்களில் பாளையங்கோட்டை வட்டம் நகர்ப்புறப் பகுதிகளில் ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டி குடியிருந்து வருபவர்களை கணக்கெடுத்து தகுதியின் அடிப்படையில் மாநகராட்சியின் தடையின்மைச் சான்று வழங்க மாமன்றம் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

முன்னதாக மேயர் தலைமையில் உலகம் முழுவதும் போற்றி வணங்கப்பட்ட போப் பிரான்சிஸ் என்பவர் 266 வது போப்பாக தேர்வு செய்யப்பட்டவர். இவர் இயேசு கிறிஸ்துவின் உண்மையான சீடராக முன்மாதிரியாக திகழ்ந்தார்.அண்ணார் மாரடைப்பு காரணமாக 22/4/2025 அன்று மரணம் அடைந்தார்.அவருக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையிலும் மத நல்லிணத்துக்காக ஜனாதிபதி விருது பெற்ற மறைந்த முன்னாள் மாமன்ற உறுப்பினர் பரமசிவபாண்டியன் அவர்களுக்கும், காஷ்மீர் பயங்கரவாதிகள் தாக்குதலில் உயிர் இருந்தவர்களுக்கும் கூட்டத்தில் இரங்கல் தீர்மானம் தெரிவித்து 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

கூட்டத்தில் சாதாரண கூட்டத்தில் தீர்மானம் 1 முதல் 22 வரையிலும்,அவசரக் கூட்டத் தீர்மானம் எண் 1 முதல் 66 வரையிலும் சிறப்பு தீர்மானம் 3 ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் மண்டலம் தலைவர்கள் பிரான்சிஸ் (பாளை) ரேவதி (தச்சை) கதிஜா இக்லாம் பாசிலா (மேலப்பாளையம்) மகேஸ்வரி (நெல்லை) மற்றும் நிலை குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மாநகர பொறியாளர், உதவி ஆணையாளர்கள், மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

### மேலப்பாளையம் நகர முன்னாள் செயலாளர்

# வெ.இ.நாகூர் மீரான் 18 ஆம் ஆண்டு நினைவு நாள்!

## ஆமினா சாதிக் ஏற்பாட்டில் – டி.பி.எம்.மைதீன்கான் உணவு வழங்கினார்!

*நெல்லை, ஏப். 29-*

நெல்லை ஒருங்கிணைந்த மாவட்ட முன்னாள் துணைச் செயலாளரும், மேலப்பாளையம் நகர முன்னாள் செயலாளரும், மேலப்பாளையம் மண்டல முன்னாள் தலைவர், தொடக்கக் கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவருமான மறைந்த வெ.இ.நாகூர் மீரான் அவர்களின் 18ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மேலப்பாளையம் பகுதிக்கழக துணைச் செயலாளர், ஆமினா சாதிக் ஏற்பாட்டில் (27.04.2025 ஞாயிற்றுக்கிழமை) இரவு 7 மணியளவில் மேலப்பாளையம் அம்பை சாலை ஞானியார் அப்பா தெரு முனையில் உணவு வழங்கப்பட்டது.

நிகழ்வில் முன்னாள் அமைச்சர், கழக மாநில சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு தலைவர் டி.பி.எம். மைதீன்கான் பங்கேற்று துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்தியானந்த், மாநில சட்டத் துறை துணைச் செயலாளர் எஸ்.ராஜா முஹம்மது, மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், பொதுக்குழு உறுப்பினர்கள் முன்னாள் மேயர் பி.எம்.சரவணன், பரமசிவ ஐயப்பன், நெல்லை பகுதிக் கழகச் செயலாளர் நமச்சிவாயம், மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எல்.முகமது மீரான் மைதீன், சபி முகமது, ஆதிதிராவிட நலக்குழு மாவட்ட அமைப்பாளர் நவநீதன் மற்றும் முறுக்கு சாகுல், பத்மராஜ், இசக்கி,சாலி மௌலானா, கழக மூத்த முன்னோடி சாகுல் ஹமீது, கார்டன் சேகர், சுரேஷ் வெங்கடேஷ், நெல்லை ரவி, பிரிட்டோ அலெக்சாண்டர், அனிதா, சைபுன்னிஷா, மூக்கையா, பேரங்காடி ஐயப்பன், பிரான்சிஸ், ஜமீலா காஜா, கண்ணன், ஷெட்டி, வினோத், பெரோஸ்கான், கார்த்திக் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### பிரவீன் ஐயப்பன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# கடலூரில் வேலைவாய்ப்பு முகாமில் 3451 பேருக்கு பணி நியமன ஆணை!

## சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் வழங்கினார்!

*கடலூர், ஏப். 29 -*

கடலூர் சட்டமன்றத் தொகுதியில் புகழ்பெற்ற தனியார் தொழில் நிறுவனங்கள் பங்கேற்ற வேலை வாய்ப்பு முகாம் கடலூர் புனித வளனார் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

இம்முகாமில்64தனியார் நிறுவனங்கள் பங்கேற்ற நிலையில் 5 ஆயிரத்து 868 பேர் கலந்து கொண்டனர். இதில் 3451 பேர் பணிக்கு தேர்வு செய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்து தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு பணி ஆணை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.நிகழ்ச்சியில் கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ. தலைமை தாங்க, தேர்வு பெற்ற நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கி பாராட்டினார்.

வேலை வாய்ப்பு முகாமிற்கானஏற்பாடுகளை டாக்டர் பிரவீன் ஐயப்பன் செய்து அனைவரையும் வரவேற்றார்.

முகாமில் சத்தியசேகர், சுதன்பவர்டெக்பூங்குன்றன், முன்னாள் கூட்டுறவு சங்கத் தலைவர்கள்ஆதிபெருமாள், ரவிச்சந்திரன், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், புனித வளனார் கல்லூரி செயலர் சுவாமிநாதன், முதல்வர் அருமைசெல்வம், லஷ்மி செக்யூரிட்டி சர்வீஸ் கே.ஜி.எஸ். தினகரன், மாநகராட்சிகவுன்சிலர்கள் சரத் தினகரன், சுமதி ரங்கநாதன், கீர்த்தனா ஆறுமுகம், முத்து கலர் லேப் முத்து, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் நிலா ஹோட்டல் தங்கராசு, லட்சுமணன், சுதாகர், ரோட்டரி பிறையோன், மதியழகன், ரமேஷ், வேல்முருகன், சன் பிரைட் பிரகாஷ், ராசன், பள்ளி உதவி தலைமை ஆசிரியர் தனுஷ், சுரேஷ் ராஜன், பேராசிரியர் பன்னீர் செல்வம், லயன்ஸ் சங்க சண்முகம், ஜெயச்சந்திரன், விஜயன்,சேதுநாதன்மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் தொப்பூர் ஊராட்சியில் வார சந்தையை புதுப்பித்து தருமாறு பொதுமக்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி நேரில் சென்று ஆய்வு செய்து உடனடியாக நாடாளுமன்ற தொகுதி நிதியிலிருந்து புதுப்பித்து தருவதாக உறுதி அளித்தார். இந்த நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் கே.பி.மல்லமுத்து, ஏ.எஸ்.சண்முகம், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை அமைப்பாளர் ஆர்.ஈஸ்வர், விவசாய தொழிலாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் எஸ்.கே.துரைசாமி, ஒன்றிய அவைத் தலைவர் பி.ஆர்.மணி, ஒன்றிய துணை செயலாளர்கள் கலாராணி கண்ணன், வெங்கடேசன், ஒன்றிய பொருளாளர் மோகன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



கடலூர் சட்டமன்றத் தொகுதியில் புகழ்பெற்ற தனியார் தொழில் நிறுவனங்கள் பங்கேற்ற வேலை வாய்ப்பு முகாமில் 64 தனியார் நிறுவனங்கள் பங்கேற்ற நிலையில் 5 ஆயிரத்து 868 பேர் கலந்து கொண்டனர். இதில் 3451 பேர் பணிக்கு தேர்வு செய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்து தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு பணி ஆணையினை கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ. தலைமை தாங்க, தேர்வு பெற்ற நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கி பாராட்டினார். வேலை வாய்ப்பு முகாமிற்கான ஏற்பாடுகளை டாக்டர் பிரவீன் ஐயப்பன் செய்து அனைவரையும் வரவேற்றார்.